**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 672/2025**
**U/s. 294(b),323,506(ii) IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1)**

| | |
|---|---|
| **Name** : மணிவண்ணன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2025** |

**1,2** எதிரிகள் ஆஜர். **3** வது எதிரி ஆஜர் இல்லை.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 672/2025 30.01.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.55 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் கரந்தாட்டங்குடி மேட்டு தெருவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி பத்மாவதி எனது உடன் பிறந்த தங்கை ஆவார். 2 வது எதிரி தியாகராஜன் பத்மாவதியின் மகன் ஆவார். 3 வது எதிரி தனலெட்சுமி எனது தாயார் ஆவார். எனக்கும் எனது தங்கை எதிரி பத்மாவதிக்கும் சொத்து சம்மந்தமாக தகராறு இருந்து வந்தது. எனது வீட்டினை காலி செய்வதற்காக வக்கீல் நோட்டிஸை அனுப்பி இருந்தார். கடந்த 26.03.2024 ம் தேதி காலைவேலையில் எனக்கும் எனது அம்மா தனலெட்சுமிக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை நடந்தது. எனது அம்மா எனது வீட்டில் தான் இருந்து வந்தார். எனது அம்மாவை சத்தம் போட்டதை எனது தங்கை பத்மாவதி மற்றும் அவரது கணவர் செல்வகுமார் ஆகியோர்களிடம் சொல்லி உள்ளர். 27.03.2024 ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் கடைக்கு சென்று விட்டு எனது வீட்டின் வாசலில் வாகனத்தை நிறுத்தினேன். எதுவும் சொல்லாமல் எனது தங்கை கணவர் செல்வகுமார் முகம், தலை பகுதியில் கையால் பொட்டு பொட்டு என்று அடித்து எனது சட்டையை கிழித்தார். அதன்பிறகு 28.03.2024 ம் தேதி இரவு 10.00 மணியளவில் எனது தங்கை மகன் தியாகராஜன், பத்மாவதி, தாயார் தனலெட்சுமி ஆகிய மூவரும் எனது வீட்டிற்கு வந்து வெளியே வாடா தேவுடியா மகனே என்று திட்டினார்கள். நான் வெளியே வந்தேன். அவர்களுடன் கூட வந்த இரண்டு நபர்களுடன் எதிரி தியாகராஜன் என்னை அடித்தார்கள். அந்த இரண்டு நபர்கள் தியாகராஜனின் நண்பர்கள். தெருவில் இருந்தவர்கள் என்னை அடித்தவர்களை விலக்கி விட்டார்கள். எனது தங்கை மகன் தியாகராஜன் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் . எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள

கையொப்பம் என்னுடையதுதான். புகார் நான் கொடுத்ததுதான் . **அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1–3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. எனது வீட்டிலிருந்து காவல் நிலையம் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 1 1/2 கிலோ மீட்டர் இருக்கும். பத்து நிமிடத்தில் சென்றுவிடலாம். நான் குடியிருக்கும் வீடு எனது சகோதரிகள் பெயரில் செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளாரா என்றால் இல்லை. அந்த சொத்து சம்மந்தமாக எதுவும் பிரச்சனை நடந்து வருகிறது என்றால் சரிதான். எங்களுக்குள் சண்டை நடந்து வருகிறது. அந்த சொத்து பூர்விக சொத்து அது சம்மந்தமாக எனது தங்கை பத்மாவதி , சங்கீதா வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன். 2 வது எதிரி கணவர் செல்வகுமார் கொடுத்த புகாரில் பேரில் என்னை போலீசார்தொடர்ந்து 3 நாட்கள் விசாரித்தார்கள்.சமரசம் செய்தார்கள். இது சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். நான் என்னை அடித்ததாக கூறிய சம்பவம் நடைபெற்று 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன். ரொம்ப வருடங்களாக ஆனதால் தேதி ஞாபகமில்லை. மேட்டுதெருவில் யார் பார்த்தார்கள் என்று தெரியாது. என்னை அடித்தது தியாகராஜனின் நண்பர்கள் இருவர். நான் கொடுத்த புகாரில் அம்மா, தங்கை அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு கூறவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்பதால் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 26.03.2024 ம் தேதி 2 வது எதிரியின் கணவர் செல்வகுமாரை நான் அடித்தது தொடர்பாக போலீசார் தொடர்ந்து 3 நாட்கள் விசாரணை செய்தனர்.

2. நான் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் நான் எங்களுக்குள் உள்ள சொத்து தகராறு சம்மந்தமாகவும், சட்ட அறிவிப்பு கொடுத்தேனா என்பது பற்றி சொன்னேனா என்றால் சொல்லவில்லை. 2 வது எதிரியின் கணவர் கொடுத்த புகாரின் பேரில் சமரசம் செய்ய பொய்யான புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. என்னை அடித்தது 29 அல்லது 30 ம் தேதி. அந்த இரண்டாவது சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்றால் எனது வீட்டின் தெருவில் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். 29 அல்லது 30 ம் தேதி என்னை விசாரித்தார்கள். 28 ம் தேதியாகவும் இருக்கலாம். இரண்டு வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவம்

நடைபெறவில்லை என்றாலும், என்மீது கொடுத்த புகார் தொடர்பாக சமரசம் செய்ய பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 672/2025**
**U/s. 294(b),323,506(ii) IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 2)**

| | |
|---|---|
| **Name** : சாந்தி | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2025** |

**1,2** எதிரிகள் ஆஜர்**. 3** வது எதிரி ஆஜர் இல்லை**.**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 672/2025 30.01.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.30 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் கரந்தையில் குடியிருந்து வீட்டுகுடிதனம் செய்து வருகிறேன். அசா1 எனது கணவர் ஆவார். எதிரிகள் பத்மாவதி, தியாகராஜன், தனலெட்சுமி ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனது உறவினர் ஆவார். கடந்த 2024 ம் வருடம் 3 வது மாதம் தேதி நினைவில்லை. காலை வேலையில் எங்களுக்கும் எனது மாமியாருக்கும் சாப்பாடு சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. அதில் மாமியாரான தனலெட்சுமி என்பவர் எதிரி பத்மாவதி வீட்டிற்கு சென்றுவிட்டார். பின்னிட்டு ஏன் எனது மாமியாரை பேசினீர்கள் சொல்லி பத்மாவதி கணவர் எனது கணவர் அசா1யை எனது வீட்டில் வைத்து கையால் அடித்து விட்டார். பின்னர் எனது மகன் இரண்டு நாட்கள் கழித்து எங்கள் வீட்டிற்கு வந்தார். என்னவென்று கேட்பதற்காக எனது மகனும், அசா1வும் எனது நாத்தனார் பத்மாவதி வீட்டிற்கு சென்றதாகவும், அங்கு வாய்தகராறு ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார்கள். பின்னர் பத்மாவதி தரப்பினர் வழக்கு பதியப்பட்டு எனது கணவரையும், மகனையும் அழைத்து சென்று விசாரித்து மறுநாள் வர சொன்னதாக வந்து விட்டார்கள். அன்றையதினம் இரவு 10.00 மணியளவில் பத்மா, தனலெட்சுமி, தியாகராஜன் ஆகியோர்களுடன் அடையாளம் தெரியாத இரு நபர்கள் எனது வீட்டிற்கு வந்து எனது கணவரை குச்சிகாரி, தேவுடியா மகனே என்று சொல்லி வாசலில் நி்ன்று கூப்பிட்டார்கள். எனது கணவர் அசா1 வெளியே வந்தார். எனது மாமியார் தனலெட்சுமி, நாத்தனார் சும்மா நின்றார்கள். தியாகராஜன் அவர்களுடன் வந்த இரண்டு நபர்கள் எனது கணவரை அடித்தார்கள். அருகில் இருந்தவர் சண்டையை விலக்கி விட்டார்கள். எனது கணவருக்கு உள்காயம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1–3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் என்னை தொலைபேசியில் விசாரித்தார்கள். நான் போலீஸ் விசாரணையில் காலை வேலையில் எங்களுக்கும் எனது மாமியாருக்கும் சாப்பாடு சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாகவும், அதில் மாமியாரான தனலெட்சுமி என்பவர் எதிரி பத்மாவதி வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், பின்னிட்டு ஏன் எனது மாமியாரை பேசினீர்கள் சொல்லி பத்மாவதி கணவர் எனது கணவர் அசா1யை எனது வீட்டில் வைத்து கையால் அடித்து விட்டதாகவும், பின்னர் எனது மகன் இரண்டு நாட்கள் கழித்து எங்கள் வீட்டிற்கு வந்ததாகவும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலீசார் என்னை நேரில் விசாரிக்கவில்லை . சம்பவம் நடந்த அன்றே போலீசார் எனது வீட்டிற்கு வந்தார்கள். அன்றே எனது கணவரையும், மகனையும் காவல்நிலையம் விசாரணைக்கு அழைத்து சென்றார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க் கவில்லை என்றால் சரியல்ல. பார்த்தேன். தியாகராஜன் தான் அடித்தார். முகம் தெரியாத இரண்டு நபர்கள் அடித்ததாக போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அசா1 மீது 2 வது எதிரியின் கணவர் செல்வகுமார் கொடுத்த புகார் தொடர்பாக விசாரணைநிலுவையில் இருந்த சமயம் அவர்கள் சமரசம் ஆகாத காரணத்தினால் மேற்படி எனது கணவர் அசா1 மீது கொடுத்த புகார் தேதியிலிருந்து 3 நாட்கள் கழித்து எதிரிகளை மிரட்டி சமரசம் செய்ய இந்த பொய் புகார் அசா1 ஆல் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.